**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.250/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | விமலா | Prosecution | P.W-6, LW-6 |
| Husband Name | கணேசன் | Defence | |
| Village | காருகுடி | Taluk | Sirkali |
| Calling | | Age | 45/2024 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha, Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**
**15.05.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது .**

**முதல் விசாரணை**

1. நான் அண்ணன்பெருமாள் கோவில் பகுதியில் வசித்து வேலை செய்து வருகிறேன். சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் பகல் 3 மணியளவில் நான் மண்டபத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது எதிரி புகார் தாரர் சீனிவாசனுக்கு சொந்தமான பாக்குமரங்களை வெட்டிக்கொண்டிருந்தார். அதை அசா.1 கேட்ட போது மாடியில் இருந்து இறங்கி வந்த எதிரி, அவர் கையில் வைத்திருந்த அருவாளால் 'உன்னைத்தான் நான் எதிர்பார்த்தேன் என்று சொல்லிக் கொண்டு, அ.சா.1ன் கழுத்தில் அரிவாளை வைத்தார்'. எதிரி அவரை வெட்டி விடுவார் என பயந்து நான் அவர்களைத் தள்ளிவிட்டு வீட்டிற்குள் சென்று விட்டேன். எதிரி அ.சா.1ன் கழுத்தில் அரிவாளை வைத்த போது அவர் அதனை தடுத்ததால் அவர் கையில் ஐந்து விரல்களிலும் ரத்த காயம் ஏற்பட்டது. என் முன்பு போலீசார் நீல கலர் பிடி கொண்ட கத்தியை கைப்பற்றினார்கள். ஆனால், எதிரி வெட்ட சென்றது அரிவாளால் தான். அந்த அரிவால் எதிரி வீட்டில் தான் இருக்கிறது. அவர் அதனை எடுத்துச் சென்று விட்டார். பின்பு எதிரி போலீசாரிடம் வெட்டியது தான் தான் என ஒப்புக்கொண்டார். அதற்கு நான் சாட்சியாக கையொப்பம் செய்து

கொடுத்துள்ளேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி கையொப்பங்கள் மட்டும் முறையே அசாஆ.4 மற்றும் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் புகார் தாரர் சீனிவாசன் வீட்டில் தான் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற அதே தேதியில் தான் நான் போலீசாரிடம் ஆவணங்களில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் மாலை சுமார் 4.00 மணியளவில் கையொப்பம் செய்து கொடுத்தேன். எத்தனை ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு ஆவணங்களில் தலா ஒரு கையொப்பம் செய்தேன். நான் பெற்றுத் தாளிலும் கையொப்பம் செய்தேனா என்றால் கையொப்பம் செய்தேன். என்னோடு சேர்ந்து வேறு எத்தனை நபர்கள் கையொப்பம் செய்தார்கள் என்றால் நான் மட்டும்தான் செய்தேன். நான் என் முதல் விசாரணையில் சொன்னது போன்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எனது முதலாளிக்கு ஆதரவாக அவர் புகார் தாரர் என்கிற படியால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை**

தற்போது என்னிடத்தில் காட்டப்படும் இந்த வழக்கு சொத்தான அரிவாளை பயன்படுத்தி தான் எதிரி அசா.1னை வெட்டினாரா என்றால் இல்லை. அது சிறியதாக இருக்கும் வேறு ஒரு மாதிரிவேஹுர் அறுவாள் ஆகும்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC.250/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | விஸ்வநாதன் | Prosecution | P.W-7 , LW7 |
| Father Name | கிருஷ்ணமூர்த்தி | Defence | |
| Village | அண்ணன்பெருமாள் கோயில் | Taluk | Sirkali |
| Calling | | Age | 56/2025 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha, Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**
**<u>15.05.2025.</u>**
சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது .**

**<u>முதல்</u> விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து சமையல் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் காணப்படும் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 08.07.2021ம் வருடம் மதியம் சுமார் 3.00 மணி அளவில் நான் அ.சா.1னுடைய கல்யாண மண்டபத்தில் சமையல் வேலை செய்து கொண்டிருந்தபோது, அ.சா.1க்கும் எதிரிக்கும் நடந்த சண்டை சம்பவம் சம்பந்தமாக வைத்தீஸ்வரன் கோவில் போலீசார் மேற்படி இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் புகார் தாரரின் கல்யாண மண்டபத்தில் சமையல் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். எனது முதலாளியுடன் நானும் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றேனா என்றால் நான் செல்லவில்லை. என் முதலாளி புகார் கொடுத்த அன்றைய தினமே உடனடியாக போலீசார்

மேற்படி மண்டபத்திற்கு வந்து என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஆமாம். என்னிடம் எத்தனை கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஒரே ஒரு கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் செய்து ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லையா என்றால் விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**